لا إله إلا الله محمد رسول الله

إن الدين عند الله الإسلام



# Friday Sermon

**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH**

**MUNIR AHMAD AZIM**

22nd June 2018
(07 Shawwal 1439 AH)

## “The Divine Messages of 18 – 19 June 2018”

## “2018 ஜுன் 18 – 19 தேதிகளில் பெற்ற இறைச் செய்திகள்”

**(Tamil version - தமிழ் பதிப்பு)**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவ்வுதும், அல்ஃபாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

ரமலான் மாதத்தின் அருட்கொடைகள் மற்றும் நற்பலனை முழுமையாக அடைவதற்காக அயராத உழைத்த நம்பிக்கையாளர்களுக்காக இன்றைய என் குத்துஃபாவை நான் சமர்பிக்கின்றேன். அல்லாஹ்வின் முன் தங்களை தாமே அர்பணித்து கொள்ள ஒவ்வொருவரும் முன்வரும் ஒரு நாளுக்காக நான் ஆசைப்படுகிறேன். அந்நாளில் அவர்களின் அனைத்து விதமான செயல்களையும் அல்லாஹ் அங்கிகரித்து அதனை ஏற்றுக் கொள்ளட்டும். அதற்காக நான் பிரார்த்தனை செய்கிறேன். இன்ஷா அல்லாஹ்! அல்ஹம்துலில்லாஹ்! நம் சகோதர – சகோதரிகளில் பெரும்பான்மையானவர்களும் ஈதுல் பித்தருக்கு பிறகும் ஆறு

நாட்கள் நோன்பு நோற்றார்கள். அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ்வை அடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர்கள் அவனிடம் காட்டிய அன்புக்கு தக்கதான வெகுமதிகளை அல்லாஹ் அவர்களுக்கு வழங்கட்டும் ஆமீன்.

உலகெங்குமுள்ள ஜமா அத்துசஹீஹில் இஸ்லாமை சார்ந்த என் அன்பான தோழர்களிடம் நான் ஒன்றை கூற விரும்புகிறேன். அதாவது நான் இன்று உங்களின் முன் வைக்க விரும்பிய பிரசங்கம் இதல்ல. ஆனால் சில செய்திகள் அல்லாஹ்விடமிருந்து நான் நேரடியாக பெற்றிருக்கின்றேன். இந்நூற்றாண்டில் கலீ:.பத்துல்லாஹ் என்ற நிலையில் இக்காரியத்தை உங்களின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டியது என் கடமையாக உள்ளது.

ஜூன் 18-ம் தேதி திங்கட்கிழமை இஸா தொழுகைக்கு பிறகு திருக் குர் - ஆனிலிருந்து “ஆல இம்ரான்” அத்தியாயம் நான் வாசித்துக் கொண்டிருந்தேன். அதாவது அல்லாஹ்வின் பண்புகளைக் குறித்த எண்ணத்தில் நான் மூழ்கியிருந்ததுடன், “எங்கள் இறைவா” என்று ஆரம்பிக்கும் பிற துவாகளும் செய்துகொண்டிருந்தேன். பின்னர் நான் இரவு 11.00 மணியளவில் துயிலுறுவதற்காக என் படுக்கையை நோக்கி சென்றேன். அந்த நேரத்தில் நான் ஒரு நிலையாக இல்லை. என் மனம் அலைந்து கொண்டிருந்தது.என் வீட்டை சார்ந்த அனைவரும் துயிலுற்ற நிலையில் இருந்தனர். எனது மனம் எந்த ஒரு மகிழ்ச்சியும் இல்லாமல் கவலைகளால் சூழப்பட்டிருந்தது. என் உடல் முழுவதும் வியர்வை அடைந்தது. என் தலையின் மீது ஒரு பெரிய சுமை இருப்பது போல எனக்கு தோன்றியது. அந்நேரத்தில் அழகு மற்றும் இனிமை நிறைந்த ஒரு ஒலி என்னிடம் பேசுவதை நான் கேட்டேன்.

**“அவ்துபில்லாஹி மினச் செய்த்தானி ரஜூம், பிஸ்மில்லாஹி ரஹ்மானிர் ரஹீம், இன்னவாதல்லாஹி ஹறூன் பலா தஉர்ன்னக்கும் அல்ஹயாத்துத்துனியா, வலா உர்றன்னக்கும் பில்லாஹில் உறூர்”** (35 - 6)

**“மக்களே! நிச்சயமா அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானதாகும். எனவே உலக வாழ்க்கை உங்களை ஏமாற்றி விட வேண்டாம். ஏமாற்றுபவன் எவனும் அல்லாஹ்வைக் குறித்து உங்களை ஏமாற்றி விடவும் வேண்டாம்.” (35 – 6)**

இவ்வசனத்தை வெளிப்பாடாக நான் பெற்ற பிறகு, மேலும் பல்வகையான காரியங்களைப் பற்றி தகவல்களும் நான் அல்லாஹ்விடமிருந்து பெற்றுக் கொண்டேன்

“எனது முனீர் அஹமது அஸீம், உமக்கு அமீருல் மு:.மினீன் என்ற பதவியை வழங்கியது மூலமாக நான் உம் மீது மாபெரும் அருட்கொடைகளை பொழிந்திருக்கிறேன். அதற்கு பின்னர் உமக்கு முஹைத்தீன் என்ற பதவியை அளித்து நாம் அருள் புரிந்தோம். அதை தொடர்ந்து அநேக மக்கள் தங்களது கரங்களை உம் கரங்களின் மீது வைத்துக் கொண்டனர். நிச்சயமாக அது உனது கரமல்ல, மாறாக அது எனது கரமாகவே இருந்தது. அல்லாஹ்வின் தௌஹீதில் அவர்கள் அனைவரையும் ஒன்று சேர்ப்பதற்காக! இன்னொரு வார்த்தையால் கூறிக்கொள்வோமேயானால், அவர்கள் உம்மிடம், உம் கரங்களில் பை – அத்துசெய்துக் கொண்டனர். நீர் இந்நூற்றாண்டின் முஹைத்தீன் என்று அவர்கள்

நம்பிக்கைக் கொண்டனர். எனது முனீர் அஹமது அஸீம், எந்த ஓர் மனிதனும் அறியாமல், உம் இறைவன் தனது வேலைகளை எவ்வாறு செய்து வருகிறான் என்பதை பாருங்கள்! அல்லாஹ் தனது மகத்துவத்தால் தன்னைத் தானே வெளிப்படுத்திக் கொண்டான். அதன் ஆரம்பம் என்ற நிலையில் அமீருல் மு.ஃ.ம்மினீன் என்ற பதவிபெயரையும், அதை தொடர்ந்து முஹைத்தீன் என்றும், அதற்கு பின் முஸ்லீஹ் மௌ ஊத் என்றும், பின்னர் கலீ.ஃ.பத்துல்லாஹ் என்றும், அதை தொடர்ந்து மஸீஹ் மௌஊத் என்றும், பின்னர் முஜத்தீது என்றும், அதை தொடர்ந்து நபியுல்லாஹ் மற்றும் ரசூலுல்லாஹ் என்றும் பதவி பெயர்களையும் அவன் உமக்கு வழங்கிகொண்டான். மனிதன் தனது திட்டங்களை தீட்டுகிறான். அல்லாஹ் தனது திட்டங்களை தீட்டுகிறான். அல்லாஹ்வின் திட்டமே மிக சிறந்தது. அம்மனிதர்கள் உமக்கு தொந்தரவு கொடுக்கின்றனர். அவர்கள் மீது என்ன விழப்போகிறது என்பது அவர்களுக்கு தெரியாது. அல்லாஹ் தனது அடியார்களை உயர்த்திக் கொள்கிறான். உம் இறைவனின் தீர்மானத்திற்கு இடையூர் விளைவிக்க எவருக்கும் ஆகாது.

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் உருவாக காரணம் உம் இறைவன்தான். மனித முயற்சிகள் எதுவும் இல்லாமல், இந்த இறை அடையாளம் உலகெங்கும் பரவலாகிவிடும். விரக்தி அடைய வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்.

உங்கள் அனைவரிடமும் ஒரு செய்தியை கூற இந்த வாய்ப்பை நான் பயன்படுத்துகிறேன். இச்செய்தி இறைச்செய்தியின் பகுதியல்ல. ஆனால் என் தோழர்களிடம் இச்செயதியினை கூற வேண்டும் என நான் விரும்புகிறேன். அல்லாஹ்வின் அருளால் உலகெங்கும் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் நாள்தோறும் முன்னேற்றம் அடைந்து வருகிறது. உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து பல மக்கள் மின்னஞ்சல் (Email) மூலமாகவும், வாட்ஸ் அப் (whats app) மற்றும் தொலைப்பேசி (Phone Calls) மூலமாகவும் என்னிடம் தொடர்பு கொண்டும் தங்களது கேள்வி பதில்களை எனக்கு அனுப்பி, பகிர்கின்றனர். எனது ஏராளமான தோழர்கள் மின்னஞ்சல் மற்றும் தொலைப்பேசி செய்திகள் மூலம் தினந்தினம் தொடர்பு கொண்டு வருகின்றனர். சிலர் தொலைப்பேசி மூலமும் பேசி வருகின்றனர். நீங்கள் விரக்தியடைய வேண்டாம். எதிர்பார்பை இழக்காமலிருங்கள். நீங்கள் சோர்வடையாமலிருங்கள். நான் உங்களின் மின்னஞ்சல் மற்றும் பிறச் செய்தியினை பெற்ற உடனேயே வாசிப்பதுண்டு. உங்களுக்கு பதில் அளிக்க சற்று நேரம் எனக்கு வழங்க வேண்டும். நீங்கள் உங்களின் மின்னஞ்சல் மற்றும் பிறச் செய்தியினை அனுப்பிக் கொண்டிருங்கள். அதை பெற்ற உடனே நான் அதை வாசிப்பதோடு, ஏராளமாக பிரார்த்தனையும் செய்துவருகிறேன். பிற இராஜியங்களில் மிக பெரிய அளவிற்கு ஆன்மீக புரட்சி நடந்து வருகிறது. மற்று முஸ்லீம் சகோதர – சகோதரிகள் இந்த ஆன்மீக நீருக்காக தாகம் கொண்டுள்ளனர். அவர்களின் மின்னஞ்சல்களுக்கு பதில் அளிப்பதற்குண்டு. நீங்கள் என் தோழர்கள் என்ற நிலையிலும், நான் இறை தூதர் என்ற நிலையிலும் நீங்கள் என்னை புரிந்துக் கொள்ள வேண்டும். என் வருகையின் நோக்கம் முழு மானிட குலத்திற்காகவும் ஆகும். என் செய்தி முழு மனித குலத்திற்காகவும் ஆகும்.

அதனால் நீங்கள் விரக்தி மற்றும் கோபம் கொள்ளாமல் இருக்க வேண்டும். உங்கள் ஈமெயில் செய்திகளை எனக்கு அனுப்ப வேண்டும். நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். நான் அவற்றை வாசிப்பதுண்டு. மட்டுமல்ல கூடிய சீக்கிரம் நான் அதற்கு பதில் அளிப்பேன். உங்களின் செய்திகளை ஹுசூர் வாசிக்காமல் ஒரு பகுதியில் தூக்கி வீசுகிறார் என ஒரு நொடி நேரம் கூட நீங்கள் எண்ணாதீர்கள். அல்லாஹ் உங்களிடம் மகிழ்ச்சியடைவதற்கும், பொருந்தி கொள்வதற்குமாக நீங்கள் ஏராளமாக தூவா செய்துக் கொண்டிருங்கள். இந்த அருள்களை நீங்கள் இழக்காமலிருப்பதற்காகவே இக்காரியத்தை பற்றி நான் உங்களிடம் கூறியது. இது என் வார்த்தைகளாகும்.

**<u>மேலும் இறைசெய்தி தொடர்கிறது</u>** "எனது கலீ∴பத்துல்லாஹ் அல்லாஹ்வுடன் பொருந்திக் கொள்வதற்காக உமக்கும் உம் தோழர்களுக்கும் ஏராளமான வாய்ப்பினை நாம் அளித்திருக்கிறேன். அறிவற்ற மக்கள் இப்போது உம்மையும் உமது தோழர்களையும் இழிவுப்படுத்துகின்றனர். நீங்கள் தற்போது கவலைக்குரிய ஒரு நிலையில் உள்ளீர்கள். எல்லா நிலையிலும் மக்கள் உங்களை இழிவுப்படுத்துகின்றனர். நீங்கள் மக்களின் புறக்கணிப்பிற்கும் அவமதிப்பிற்கும் ஆளாகி வருகிறீர்கள். அவர்கள் இரத்தபந்தங்களை துண்டித்துக் கொள்வதுடன், தங்களின் பெற்றோர்களிடமிருந்து பிள்ளைகளை வேறுபடுத்திடவும் செய்கின்றனர். உங்களின் இரத்த பந்தத்தை சார்ந்த உறவினர்களின் இதயத்தில் பகைமையை அவர்கள் நிறைக்கின்றனர். நீங்கள் இறை அத்தாட்சி மீதும், இறை கலீ∴பாவின் மீதும் நம்பிக்கை கொண்டீர்கள் என்ற காரணத்தால்! இத்தகைய குற்றகரமானக் காரியங்களை மேற்கொண்டு வரும் அவர்கள், "நாங்கள் இஸ்லாத்திற்காக மிக பெரிய, சேவைகளைப் புரிகிறோம் என்று எண்ணுகின்றனர். இத்தகைய அநீதிகளை அவர்கள் இழைப்பது, தங்களது அமீர்கள் மற்றும் முல்லாக்களை மகிழ்விப்பதற்கும் அல்லது தங்களது கலீ∴பாவை மகிழ்விப்பதற்கும் ஆகும். அல்லாஹ் உங்களை சோதனைகளுக்கு ஆளாக்கி கொள்கிறான். அதனால் நாங்கள் எல்லா நிலையிலும் சோதனைகளுக்கு ஆளாக்கி விட்டோம் என்று உங்களுக்கு கூற முடியும். இறைவனின் கலீ∴பா, இறை அடையாளம் மற்றும் இறை வெளிப்பாடுகள் ஆகியவற்றின் மீது நம்பிக்கைக் கொண்டோம் என்று கூறுவதால் மட்டும், உங்களை அவன் சோதனைகளுக்குள்ளாக்காமல் விட்டுவிடுவான் என நீங்கள் எண்ணுகின்றீர்களா?

உங்கள் நம்பிக்கை உறுதிபெற்றதாகயிருந்தால், அது கான்கிரீட் போன்று வலுவை பெற்றதாகயிருந்தால், "நாங்கள் வெற்றியடையமாட்டோம் என்று நீங்கள் நொடி நேரம் கூட நினைக்கமாட்டீர்கள். அல்லாஹ்வின் வார்த்தைகள் மீது நம்பிக்கை கொண்டு உங்களின் சுமைகளை அவனிடமே ஒப்படைத்து விடுங்கள். நீங்கள் அஞ்ச வேண்டாம். அவ்வப்போது நீங்கள் சோதனைகளுக்கு ஆளாகிவிடுவீர்கள் என்பதை நீங்கள் புரிந்திருக்க வேண்டும். அதுமூலமாக உங்களை படைத்தவனுக்கு நல்லவர்கள் யார், நயவஞ்சகர்கள் யார் என்பதை பகுத்தறிந்து விட முடியும். நயவஞ்சகர்கள் நல்லவர்களைப் போன்று நடித்து வருகின்றனர். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் அனைத்து தகவல்களையும் எடுத்து அவர்கள் எதிராளிகளுக்குக் கொடுக்கின்றனர். கலவரங்களை (சீர்குலைவை) உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர்கள் செயல்படுகின்றனர். உங்கள் நம்பிக்கை மற்றும் பிற ஜமா அத்தின் நம்பிக்கையைப் பெற விரும்பும் அத்தகைய

நயவஞ்சகர்களை நீங்கள் காண்பீர்கள். அவர்களின் இத்தகையப் போலித்தனத்தின் பாலே அவர்களை அல்லாஹ் விட்டுவிடுவான்.

உங்களுடன் சற்று காலம் இருந்ததற்கு பிறகு வேறு அமைப்பில் நுழைந்து விட்டவர்களை நீங்கள் கவனித்து கொள்ளுங்கள். அத்தகையாளர்கள், நம் உறுப்பினர்களிடம் ஏதேனும் தீய செயல்கள் உள்ளதா என்பதை தேடி நடக்கின்றனர். அதாவது அவர்கள் இரண்டு அமீர்களின் இடையே இருந்து பிரச்சனைகளை உருவாக்குகின்றனர். பின்னர் இது ஒரு மோசமான ஜமா அத்து என்று அவர்கள் கூறுகின்றனர். இத்தகைய நயவஞ்சகர்கள் எல்லா வகையான தவறான காரியங்களையும் தேடிக் கொள்கின்றனர். அவர்கள் தங்களது தலையில் எல்லா விதமான சந்தேகங்கள் மற்றும் கேள்விகளை மட்டுமே எந்நேரத்திலும் வைத்திருந்தனர். அவர்கள் முழுமையாக வீழ்ச்சியடைந்தனர். தனனைத்தானே அவர்கள் அழிப்பார்கள். அவர்களால், அல்லாஹ்வுக்கும் அவனது கலீ∴பத்துல்லாஹ்வுக்கும் எந்த தீங்கும் இழைக்க முடியாது. அவர்களின் இத்தகைய தீயசெயல்கள் முடிவில் அவர்களை நரக நெருப்பிற்கு அழைத்து செல்லும்.

**<u>செய்தி தொடர்கிறது.</u>** “அல்லாஹ் தனது வார்த்தைகளை மிக ஆற்றல் வாய்ந்த நிலையில் பொழிகிறான். இந்நிலையில் ஒருவர் அச்சத்தினால் அசைக்கப்படுவார். அல்லாஹ் கூறுகிறான், சிலர் இறை அத்தாட்சிகளுக்கு சாட்சிகளாக இருக்கின்றனர். ஆனால் அதன் பின் அகந்தையுடன் அவர்கள் அதிலிருந்து விலகி செல்கின்றனர். அத்தகைய நபர்களுக்கான தண்டணை அவநம்பிக்கையாளர்களின் தண்டனையை விட இரண்டு மடங்கு அதிகமாகும். அல்லாஹ் மற்றும் அவனது தூதர் மீதான நம்பிக்கையில் உறுதியுடன் நிலை நிற்பவர்கள், எல்லா வகையிலும் சோதனைகளுக்குள்ளாகியிருந்தாலும் அவர்கள் பொறுமையை கையாளுவதுடன், எதுவொன்று நிகழ்ந்தாலும் தங்களது நம்பிக்கையில் உறுதியுடன் நிலை நிற்பதன் காரணமாக முடிவில் வெற்றியடைகின்றனர். கண்ணியம் மற்றும் அருட்கொடைகளின் கதவுகள் அவர்களுக்கு முன் திறந்து விடுகிறது. அதனை அவர்கள் அடைந்து விடவும் செய்கின்றனர்.

அல்லாஹ் உங்களை கைவிட மாட்டான் என்று உறுதியளிக்கின்றான். ஏனெனில் நீங்கள் எதிர் கொள்ளும் சோதனைகள் அனைத்தும் அல்லாஹ்வின் ஒரு அருட்கொடையாக நீங்கள் எடுத்துக் கொள்கின்றீர்கள். ஒவ்வொரு சகாப்தத்திலும் இத்தகைய சோதனைகளை பொறுமையுடன் தாங்கி வந்த மக்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் இப்பூமியில் இறப்பிற்கு ஆளாகி விட்டாலும் கூட, அத்தகைய மக்களின் பெயர்கள் என்றென்றும் உயிருடன் இருக்கும். அவர்களின் பெயர்களை நம்பிக்கையாளர்கள் மிகுந்த மரியாதையுடன் நினைவு கூறுகின்றனர். தீர்ப்பு நாள் வரையில் அவர்கள் மதிப்பிற்குரியவர்களாக திகழ்வார்கள்.

இந்த சகாப்தத்திலும் கூட இத்தகைய மக்கள் உருவாகி விடுவார்கள். அவர்களின் பெயர்கள் தங்க எழுத்துக்களால் பதிவு செய்யப்படும். எனவே இறைவன் உங்களை தேர்வு செய்திருக்கின்றான் என்பது உண்மையென்றால், இத்தகைய சோதனைகள் யாவையும் நீங்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றுக் கொள்ளுங்கள்.

கலீஃபத்துல்லாஹ், முஜத்தீது, மஸீஹெ மௌஊத், நபியுல்லாஹ் மற்றும் ரசூலுல்லாஹ் போன்ற பெயர்கள் அனைத்தும் நான் தேர்ந்தெடுத்த என் சேவகனுக்கு நாமே வழங்கினோம். என்னிடமிருந்தே இவை வந்துள்ளது. இத்தகைய பெயர்களை நானே என் அன்புக்குரிய அடியானுக்கு வழங்கியிருக்கிறேன். உலகனைத்திலுமுள்ள ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை சார்ந்த உறுப்பினர்களிடம் நீர் கூறுவீராக! நான் அவர்களுடன் இருக்கிறேன். என் அடையாளங்கள் மீது நேர்மையுடனும் நம்பிக்கையுடனும் இருக்குமாறு கூறுங்கள். அவர்கள் நன்றி கெட்டவர்களாகவும் நயவஞ்சகர்களாகவும் இருக்கக் கூடாது. துன்புறுதல்களுக்கு ஆளாகும் போது அவர்கள் என் சான்றுகளிலிருந்து விலகி செல்லாமல் இருக்க வேண்டும் அவர்களிடம் கூறுவீராக! என் தண்டனை மிக கடுமையானதாகும். அவநம்பிக்கையாளர்களுக்கு அளிக்கும் தண்டனைகளை விட கடுமையானதாகும்.

நீங்கள் இவ்வுலகில் முத்துக்கள் ஆவீர்கள். இறைவன் தேர்ந்தெடுத்த தனது அடியாரிடம் உரையாடி வரும் இத்தகைய ஒரு காலகட்டத்தில் வாழ்ந்துக் கொள்ளும் நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகளாவீர்கள். நீங்கள் பன்றிகளின் கண்களுக்கு முன்பாக முத்துக்களைப் போல் இருக்கின்றீர்கள். பன்றிகளுக்கு தங்கள் முன்பாகயிருக்கும் முத்துகளின் உண்மையான மதிப்பை தெரியாது. ஆனால் இறைவனின் பார்வையில் நீங்கள் பிரகாசித்து கொள்கிறீர்கள். நீங்கள் எங்கு சென்றாலும் அல்லாஹ்வின் நிழல் உங்கள் மேல் இருக்கின்றது. இவ்வுலகிலும் மறுவுலகிலும் நீங்கள் உங்களின் இறைவனைத் தேடுங்கள். உங்களில் மிக சிறந்தவர், மிகவும் பொறுமையுடனிருப்பவராவார். அவர் தனது இறைவனுக்கு மட்டுமே அஞ்சுபவராகயிருப்பார். ஒரு கண்ணாடியைப் போல் உங்கள் இதயங்களைச் சுத்தப்படுத்துங்கள். அந்நேரம் அல்லாஹ்வின் ஒளி அதில் பிரதிபலிப்பதாக உங்களுக்கு காண முடியும். இத்தகைய இதயங்கள் இந்த பௌதீகமான உலக காரியங்களுடன் இணைந்திருக்காது. இன்ஷா அல்லாஹ்.

உங்கள் அனைவர்கள் மீதும் நான் வைத்திருக்கும் அன்பு மிக ஆழமானதாகும். ஆனால் நீங்கள் எனது அன்பை உங்களின் இதயங்களில் வளர்க்க வேண்டும். அவ்வாறேயானால் நான் அருகில் இருப்பதாக உங்களுக்கு உணர முடியும். நான் உங்களின் தமனியைவிட (Artery) மிக அருகில் இருக்கிறேன் என்பதை நீங்கள் உணர வேண்டும். நீங்களே உங்களை பார்வையிடுங்கள். உங்களை சுயம் புரிந்துக் கொள்வதற்கு நீங்கள் முயற்சி செய்யுங்கள். அந்நிலையில் உங்களுக்கு என்னை காண முடியும். இந்த பௌதீக உலகத்தில் நீங்கள் ஈர்க்கப்பட்டுள்ளீர்கள். அது உங்கள் கண்களின் மீது ஒரு திரை சீலையை உருவாக்கி உள்ளது. அக்காரணத்தால் என்னை உங்களுக்கு காண முடியவில்லை. இந்த திரைச்சிலையை நீக்கிக் கொள்வதில் நீங்கள் வெற்றியடைந்தால், இந்த மறையிலிருந்து வெளியே வர உங்களுக்கு முடிந்தால், உங்களின் அருகில் இருக்கும் என்னை காண்பதற்கு உங்களுக்கு முடிந்து விடும். ஆனால் இத்திரைசிலையை நீக்குவதற்கு தேவையான முயற்ச்சிகளில் நீங்கள் ஈடுபட்டுக் கொள்ளவில்லை. நான் இங்கு தான் இருக்கிறேன். ஒரு நீரூற்று போற்று! அதற்காக நீங்கள் தேவையான முயற்சியினை எடுக்க வேண்டும். அந்நேரம் அந்த நீரூற்றை உங்களுக்கு அடைய முடிந்து விடும். அது மூலம் உங்களின் தாகம் தணிந்து விடும். அல்லாஹ்விடமான பயம் மற்றும் கட்டுப்படுதலை நீங்கள்

உங்களிடம் வளர்க்க வேண்டும். அந்நிலையில் அருள் நிறைந்த அமைதி பூர்வமான ஒரு வாழ்க்கை உங்களுக்கு வந்தடையும்.

நீங்கள் ஒவ்வொருவரும் மிக தாழ்மையுடையவர்களாக இருங்கள். நீங்கள் மனத் தாழ்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஒற்றராக இருந்து விடாதீர்கள். உங்களின் தலைகளில் சந்தேகங்களை குவித்துக் கொள்ளாதீர்கள். ஏனெனில் சந்தேகம் உங்கள் இதயங்களில் பகைமையை வளரச் செய்யும். அது உங்களை அழிவின்பால் அழைத்து செல்லும். எவராவது உண்மையை பகுத்தறியாமல் இருந்தால், அவரது மனதில் சந்தேகம் குடிகொள்கிறது என அர்த்தம். சந்தேகம் ஒரு கடுமையான நோய் ஆகிறது. அது உங்கள் நற்செயல்களை எரித்துக் கொள்வதுடன், உங்களை நரக நெருப்பிற்கு அழைத்து செல்கிறது. சந்தேகம் நம்பிக்கையை அழித்து விடும். சந்தேகம் என்பது வீடு, குடும்பம் மற்றும் சமூகத்தில் குழப்பங்களை ஏற்படுத்துவதுடன் பழிவாங்கும் உணர்வுகளை அது நமக்குள் வளர்கின்றது.

நான் தேர்ந்தெடுத்த எனது சேவகரே நீர் உம் நேர்மையான தோழர்களிடம் கூறுவீராக! நீங்கள் சந்தேகங்களிலிருந்து விலகி கொள்ளுங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடனும் அன்புடனும் இருங்கள். உங்களில் ஒருவர் துன்பம் அடைந்தால் நீங்கள் அனைவரும் அவரின் அத்துன்பத்தை உணர வேண்டும். அவருக்காக அதிகமளவு பிரார்த்தனை செய்ய வேண்டும். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் ஒரு குடும்பமாகும். அதில் நீங்கள் ஒரு குடும்பத்தைப் போன்று வாழ வேண்டும். உங்களில் எவ்வித வேற்றுமையும் இருக்கக் கூடாது. அதாவது ஒருவர் மற்றொருவரிடம் பொறாமைக் கொள்ளக் கூடாது. ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை சார்ந்த சகோதர – சகோதரிகளைப் பற்றி இழிவாக எதுவும் பேசாமலிருங்கள். உங்கள் ஒவ்வொருவரிலும் நட்பு மற்றும் உறவுகளை வலிமைபடுத்துவதற்கும், அன்பு எனும் தூணை திடப்படுத்துவதற்குமாக என் கலீ.பத்துல்லாஹ் உங்கள் இடையே இருக்கிறார். நீங்கள் எண்ணிக்கையில் குறைவாகயிருக்கின்றீர்கள் என்று எண்ண வேண்டாம். உங்கள் எண்ணிக்கை அதிகரித்து விடும். இவ்வாறு நீங்கள் சிந்திக்க வேண்டாம். உங்கள் சுமைகளை இறைவன் முன் வைத்து விடுங்கள். இன்று முதல் உங்கள் மனைகள் விரிவாகி விடும். மிக தொலைவான பகுதியிலிருந்துக் கூட உங்கள் மற்றும் உங்கள் செயல்களினை தேடி மக்கள் வரும் நாட்கள் இதோ நெருங்கி விட்டது. இப்பிரபஞ்சத்தின் இரட்சகனையும் இந்நூற்றாண்டின் அவனது கலீ.ஃபத்துல்லாஹ்வையும் மக்கள் அறிந்து விடட்டும். நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். நீங்கள் என்பால் திரும்பிக் கொள்வீர்களேயானால், தக்வாவுடன் நீங்கள் என்னிடம் திரும்பிக் கொள்வீர்களேயானால், அவர் நிச்சயமாக என்னை காண்பார். அந்நிலையில் அவர் எங்கு சென்றாலும் என் நிழல் அவருக்கு பாதுகாவலாக இருக்கும். அவரை எவருக்கும் தொடக் கூட முடியாது.

அல்லாஹ்வின் செய்தியை கலீ.ஃபத்துல்லாஹ் உங்களை தெரிவிக்கிறார். நீங்கள் இப்பூமியில் இறப்பதற்கு முன்பாக உங்களுக்கும் அல்லாஹ்விற்கு இடையே ஒரு நெருக்கத்தை ஏற்ப்படுத்திக் வழங்குவதே அன்னாரின் நோக்கம். அவ்வாறேயானால் நீங்கள் இறைமன்னிப்பை பெற்று விடுவீர்கள். அன்னாரின் நோக்கம், ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமிலிருந்து உங்களை வெளியேற்றிக்

கொள்தல் என்பதல்ல. ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமிலிருந்து நயவஞ்சர்களையும், குற்றவாளிகளையும், குழப்பக்காரர்களையும், பிறரின் மனதில் வெறுப்பு மற்றும் சந்தேகங்களை உருவாக்குவோர்களையும், வெளியேற்றிக் கொள்பவன் அல்லாஹ் ஆவான். இத்தகைய மக்களை விரட்டி அடிப்பவன் அல்லாஹ்வேதான்.

பயபக்தியுடைய மக்களிடமிருந்தும் மற்றும் உண்மையை தேடுபவர்களிடமிருந்தும் இத்தகைய நபர்களை அல்லாஹ் வெளியேற்றிக் கொள்வான். அதற்கான அனுமதியை அவன்தான் அவர்களுக்கு அளிக்கின்றான். இது மிக அபாயமான ஓர் நிலையாகும். இந்த இறை அடையாளங்களிலிருந்தும், தனது கலீ∴பத்துல்லாஹ்விடமிருந்தும் இவ்வுலகில் வைத்தே அல்லாஹ் அவர்களை மிக தொலைவில் தூக்கி வீசுகின்றான்.

அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களே, என் கலீ∴பத்துல்லாஹ்வை ஏற்றுக் கொண்டோர்களே, நீங்கள் அல்லாஹ்வின் வழியில் உறுதியுடன் இருங்கள். நீங்கள் இச்சோதனைகளை கண்டு பயப்பட வேண்டாம். அல்லாஹ் அவனது பிரியமான சேவர்களுக்கு சோதனைகளை வழங்குகின்றான் என்றால், அத்தகைய சோதனைகளை நீக்கி கொள்பவனும் அல்லாஹ்வாகவே இருக்கின்றான். சோதனைகள் என்பது அல்லாஹ்வுக்கும் உங்களுக்கும் இடையே நெருக்கத்தை ஏற்ப்படுத்தும் ஒன்றாகும். அல்லாஹ் தனது சேவர்களின் காரியத்தில் மிக அக்கரையுடையவனாக இருக்கின்றான். அதாவது அவனை வணங்குவதிலிருந்தும், அவனுக்கு கட்டுப்படுவதிலிருந்தும் விலகி நிற்கும் நேரம் அவர்களுக்கு இத்தகைய சோதனைகளை அளிக்கின்றான். அவர்கள் அவனை மறவாமல் இருப்பதற்கு! எனவே நீங்கள் என்னை மட்டும் வணங்குங்கள். நீங்கள் முழுமையாகவும் என்னிடம் திரும்புங்கள்.

இந்த இறை வெளிப்பாடுகள் தஹ்ஜீது தொழுகை நேரம் வரையில் தொடர்ந்துக் கொண்டிருந்தது. 2018 ஜூன் 19 – ம் தேதி செவ்வாய்க் கிழமை அன்று காலை 10 – 35 மணியளவில் அல்லாஹ்விடமிருந்து மற்றொரு செய்தியும் நான் பெற்றிருந்தேன். அதற்காக நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள். இன்ஷா அல்லாஹ் அதனை நான் உங்களுக்காக வெளிப்படுத்துவேன்.

இறைச் செய்தியின் இக்குறிப்புகளுடன் இன்றைய என் வெள்ளிக்கிழமை பேருரையை நான் நிறைவாற்றுகிறேன். என் தோழர்களுக்காக அல்லாஹ் அளித்த இப்போதனைகளை நடைமுறைப் படுத்திட அவர்களுக்கு அவன் உதவி புரியட்டும். நீங்கள் உறுதியுடன் நிலைக்கொள்ளுங்கள். அல்லாஹ்வின் வழியில் நிலையாக இருங்கள். அவ்வாறேயானால் இன்ஷா அல்லாஹ்! நீங்கள் அல்லாஹ்வை பிரதிபலனாக பெற்றுவிடுவீர்கள். ஆமீன் சும்ம ஆமீன்.

அல்லாஹ் உங்கள் இதயங்களை பாதுகாப்பானாக. உங்கள் இதயம் மற்றும் ஆன்மாவும் ஆன்மீக ரீதியில் இறக்காமல் அவன் பாதுகாக்கட்டும். பாசான்குத்தனத்திலிருந்தும் விரக்தியிலிருந்தும் அவன் உங்களை பாதுகாக்கட்டும். இல்லையேல் அது உங்கள் நம்பிக்கையை அழித்து விடும். உங்கள் இதயங்களை அல்லாஹ் நேர் வழியில் செலுத்தட்டும். அந்நேரம் உங்களுக்கு அல்லாஹ்வின் பயணசங்கத்துடன் யாத்திரை மேற்கொள்ள முடியும். அச்சங்கம், ஜமா அத்துச்

சஹீஹில் இஸ்லாம் ஆகும். இந்த எளியவனாகிய சேவகனிடம் இணைந்திருகங்ள் இந்நூற்றாண்டின் இறை கலீபாவுடன் சேர்ந்திருங்கள். இன்ஷா அல்லாஹ் ஆமீன்!

நிச்சயமாக, நாம் ஒன்றிணைந்து நின்றால் மிக சிறந்த முறையில் இறைப்பணிகளில் ஈடுபட முடியும். வேற்றுமை என்பது பகைமைக்கும், சந்தேகத்திற்கும், பொறாமைக்கும் வழி வகுக்கிறது. ஆகவே நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். உங்களின் சகோதர சகோதரிகளிடமான பந்தத்தை வலுப்படுத்திக் கொள்ளுங்கள். அதன் மூலம் இஸ்லாமின் ஒற்றுமை செழிக்கட்டும். இன்ஷா அல்லாஹ்! நாம் அனைவரும் ஒன்றிணைந்து அல்லாஹ்வின் கருணையுள்ள பார்வையின் கீழ் வெற்றியை நோக்கி செல்வோம். இன்ஷா அல்லாஹ். ஆமீன் யாரப்பால் ஆலமீன்!

**Translated by**

*Azim Ahmad*

Email: azimahmad070@gmail.com

Ph: 7339689239

**ISSUED BY:**

**R. JAMALUDDIN RAOTHER**
Amir Kerala South Zone, India
Jamaat Ul Sahih Al Islam
Email: jamal.raother@gmail.com
Phone: 9447001832, 04752252663
Blog: www.sahih-al-islam.blogspot.in

